1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த அடிப்படையிலே தான் முன்னோடித் திட்டமாக செவிலிமேட்டிலே இப்படித் திட்டம் அமைக்கப்பட்டது. அது உருவான பலன் தருமானால் அந்த மாவட்டத்திலே பல இடங்களிலும் வேறு மாவட்டங்களிலும் விரிவுப்படுத்தலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

அரிசனங்களுக்கு வீடுகள்

*336 வினா—திரு ந. தருமலிங்கம் :—மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு சற்று அதிகப் பரப்பளவுள்ள வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இத்திட்டத்தின் கீழ் இதுவரை கட்டப்பட்டு வந்த வீடுகள் 96 சதுர அடி பரப்பளவு உடையன வாக இருந்தது. நடப்பு நிதியாண்டிலிருந்து இதை 177 சதுர அடியாக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, இப்பொழுது கட்டப்பட்டு இருக்கிற வீடுகளில் எல்லாம் கணவன் மனைவிகூட வாழ வசதியில்லாத முறையில் அமைந்திருக்கின்ற நிலை இருக்கிறது. எனவே மீண்டும் இதைப் பற்றிப் பரிசீலனை செய்து அகலமான வீடுகளாக கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதைத்தான் நான் சொன்னேன். 96 சதுர அடி பரப்பளவுள்ளதாக இருந்தது இப்பொழுது 177 சதுர அடி பரப்பளவாகவும் 940 ரூபாய் வரையில் செலவழிக்கப் பட்டது இப்பொழுது 1,600 ரூபாய் வரையில் உயர்த்தபட்டும் இருக்கிறது. ஆகவே கூடுதலாகச் செலவழித்து அதிகப் பரப்பளவுள்ள வீடுகளைத்தான் நாம் கட்டிக் கொடுக்கிறோம்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, 1967ஆம் ஆண்டுக்கு முன்பு அரிசனங்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளின் பரப்பளவு என்ன? இப்பொழுது கட்டிக்கொடுக்கின்ற வீடுகளின் பரப்பளவு என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: திட்டவட்டமான குறிப்பு அதைப்பற்றி என்னிடம் இப்பொழுது இல்லை.

*337 வினா—திரு இரா. இராமலிங்கம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :